# <u>DEPOSITION OF WITNESS</u>
## <u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>
## <u>IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.</u>
## Special Sessions Case No.21/2023

Prosecution Witness : **PW23**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **அனீஸ்சத்தார்** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluku** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 08th day of December 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவருக்காக குவிமுச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்ட்டுள்ளது. அவர்கள் தரப்பு வழக்கறிஞர் காணொலி காட்சி வழியாக ஆஜராகியுள்ளார். முதல் விசாரணை தட்டச்சு செய்யப்படும் கணினியின் திரை இணையதளம் மூலமாக எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு Screen Sharing செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டது.)**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சிவகங்கை மாவட்டத்தில் துணை ஆட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 19.04.2021 அன்று மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டாட்சியராக பணிபுரிந்தபோது, மணிகண்டன் (எ) கூல்மணி, த/பெ. முனீஸ்வரன், நெ.32/1, கேட்லாக் ரோடு, ராஜீவ்காந்தி தெரு, தெப்பக்குளம், மதுரை – 9 என்பவர் இந்து, அகமுடையார் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர்

என்றும், உதயநிதி (எ) சூர்யா, த/பெ. சத்தியமூர்த்தி, க.எண்.119, 2 வது பிளாக், திடீர்நகர், மதுரை என்ற முகவரியில் வசித்து வந்து, நெ.18/11, மீனாட்சி இல்லம், நிர்மலா பள்ளி எதிரில், தெப்பக்குளம், மதுரை – 9 என்ற முகவரியில் வசித்து வந்தவர் இந்து, மறவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர் என்றும், சீனிவாசன், த/பெ. சங்கர், 21/8, மேலனுப்பானடி, மதுரை என்பருக்கு சாதிச்சான்றிதழ் இல்லதாதால் அவரது உடன்பிறந்த தங்கை அஸ்வினி என்பவரின் சாதிச்சான்றிதழின் அடிப்படையில் கிழக்கு மதுரை கிராமநிர்வாக அலுவலர் அறிக்கையின் அடிப்படையில் கூறப்பட்டுள்ள சீனிவாசன் என்பவர் இந்து, மறவர், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர் என்றும், அறிக்கை வழங்கினேன். மேற்சொன்ன 3 நபருக்கு நான் வழங்கிய நான் அறிக்கை இதுதான். **அது அ.சா.ஆ.44 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் என்னை தொலைபேசி மூலம் விசாரித்தார்.

<u>7 மற்றும் 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மதுரை மாவட்டத்தில் 4 வட்டத்திற்கு கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என வட்டாட்சியர் அலுவலகங்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். மதுரை தெப்பக்குளம், அனுப்பானடி ஆகியவை மதுரை வடக்கு வட்டத்தை சேர்ந்தது என்று சொன்னால் சரியல்ல. திடீர்நகர் மதுரை மேற்கு வட்டாட்சியரின் எல்லைக்குட்பட்டது என்று சொன்னால் சரிதான். பொதுவாக சாதிச்சான்றிதழில் மாவட்ட குறியீடு எண், வட்டக்குறியீடு எண், கிராமகுறியீடு எண், சான்றிதழின் எண் ஆகிய குறிப்புகள் இருக்கும் என்று சொன்னால் சரிதான். நீங்கள் நேரடியாக மேற்சொன்ன எதிரிகளின் வீட்டிற்கு சென்று விசாரிக்கவில்லை என்றும் கிராமநிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் மட்டும் தான் விசரித்துள்ளார்கள் என்று சொன்னால் கிராம நிர்வாக அலுவலர்

மட்டும் தான் விசாரித்துள்ளார். மணிகண்டன், சூர்யா என்ற உதயநிதி ஆகியோரின் சாதிச்சான்றிதழின் நகலை நீங்கள் பார்த்தீர்களா என்றால் ஞாபகமில்லை. நீங்கள் வழங்கிய அ.சா.ஆ.44 தவறானது என்று சொன்னால் சரியல்ல. அது சாதிச்சான்றிதழ் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.08 17:52:33 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

## DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW24**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **சண்முகானந்தவடிவேல்** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 08th day of December 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவருக்காக குவிமுச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தரப்பு வழக்கறிஞர் காணொலி காட்சி வழியாக ஆஜராகியுள்ளார். முதல் விசாரணை தட்டச்சு செய்யப்படும் கணினியின் திரை இணையதளம் மூலமாக எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு Screen Sharing செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது 31.05.2025 ஆம் தேதி உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 18.12.2020 அன்று காலை 7.00 மணியளவில் வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் அலுவலில் இருந்தபோது, வேலாயுதம்பாளையம் கா.நி.கு.எண். 778/2020 ச/பி. 147, 148,

302 இதச வழக்கில், இறந்துபோன ரஞ்சித்குமாரின் பிரேதத்தை பிரேதபரிசோதனை அலுவல் நியமனம் செய்யப்பட்டு, காவல் ஆய்வாளருடன் கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். இறந்துபோன ரஞ்சித்குமாரின் பிரேதத்தை ரஞ்சித்குமாரின் தகப்பனார் ரமேஷ் அடையாளம் காண்பித்தார். அன்றைய தினம் காலை 9.15 முதல் 11.15 மணி வரை பிரேத விசாரணைக்காக ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் பிரேத விசொரணை சாட்சிகளுக்கு சம்மன் அளித்து அவர்களை விசாரித்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தார். பின்னர் 11.30 மணிக்கு ஆய்வாளரிடமிருந்து கடவுச்சீட்டு பெற்றுக்கொண்டு, மருத்துவரிடம் பிரேத பரிசோதனை செய்வதற்கான கடிதத்தை ஒப்படைத்தேன். **என்னிடம் பிரேத விசாரணைக்காக கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதம் இதுதான். அது அ.சா.ஆ.45 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ரஞ்சித்குமாரின் பிரேதத்தை மருத்துவருக்கு அடையாளம் காட்டி, பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தேன். பின்னர் பிரேத பரிசோதனை முடிந்தபின்னர், பிரேதத்தை இறந்துபோன ரஞுசித்குமாரின் பிரேதத்தை அப்பாவிடம் ஒப்படைத்து, கையெழுத்து பெற்றேன். ரஞ்சித்குமாரின் உடல் உள்ளுறுப்புக்களை பிரேத பரிசோதனைக்காக அளித்துவிட்டேன். பிரேத பரிசோதனையின்போது, பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட இரத்தக்கறை படிந்த மஞ்சள் முழுக்கை சட்டை ஒன்று, இரத்தக்கறை படிந்த முண்டாபனியன் ஒன்று, புளூ, கருநீலம் கலந்த பெர்மாஸ் டிராயர் ஒன்று அதில் இடுப்பு பகுதியில் எலாஷ்டிக் வைக்கப்பட்டுள்ளது, ஆகியவற்றை காயவைத்து, சிறப்பு அறிக்கை தயார் செய்து மேற்சொன்ன ஆடைகளை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். **நான் கொடுத்த தனியறிக்கை இதுதான். அது அ.சா.ஆ. 46 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் ஆய்வாளரிடம்**

**ஒப்படைத்த இரத்தக்கறை படிந்த முண்டாபனியன் ஒன்று இது தான். அது அ.சா.பொ.20, ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. புளூ, கருநீலம் கலந்த பெர்மாஸ் டிராயர் ஒன்று அ.சா.பொ.19 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரத்தக்கறை முழுவதும் படிந்த மஞ்சள் நிற முழுக்கை சட்டை ஒன்று அ.சா.பொ.18 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.** பிரேத பரிசோதனையின்போது, பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளையும், உடைமைகளையும், இரத்த மாதிரிகளையும், திருச்சி தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>7 மற்றும் 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல்நிலையத்திலிருந்து அரசு மருத்துவமனைக்கு சென்றது, அரசு மருத்துவமனையிலிருந்து வட்டார தடய அறிவியல் ஆய்வத்திற்கு சென்றதற்கு தனித்தனியா கடவுச்சீட்டு கொடுத்தார்களா என்றால் தனித்தனியாக கொடுத்துள்ளார்கள். அந்த கடவுச்சீட்டில் எந்த பணி நிமித்தமாக, எப்போது சென்றீர்கள் என்று குறிப்புள்ளது என்று சொன்னால் சரிதான். நான் அந்த கடவுச்சீட்டை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இறந்துபோன ரஞ்சித்குமாரின் பிரேதத்தை அவர் தகப்பனார் ரமேஷ் அடையாளம் காணப்பித்தபோது ரஞ்சித்குமாரின் பிரேதம் திறந்தவெளியில் இருந்ததா அல்லது குளிர்சாதனப்பெட்டியில் பிணவறையில் இருந்தா என்றால் குளிர்சாதனப்பெட்டியில் இருந்தது. நீங்கள் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஒப்படைத்ததற்கான ஆவணம் பெற்றுள்ளீர்களா என்றால் கொடுத்தார்கள். அதனை நீங்கள் ஆய்வாளரிடம் ஒப்படைத்தீர்களா என்றால் ஒப்படைத்தேன்.

இந்த வழக்கில் விடுபட்ட சாட்சிகளை நிரப்புவதற்காக உங்களை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் உங்கள் மேலதிகாரி சொல்லிக்கொடுத்ததன் பேரில் சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.08 17:52:41 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW25**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **சுப்பிரமணி** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 08th day of December 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவருக்காக குவிமுச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்ட்டுள்ளது. அவர்கள் தரப்பு வழக்கறிஞர் காணொலி காட்சி வழியாக ஆஜராகியுள்ளார். முதல் விசாரணை தட்டச்சு செய்யப்படும் கணினியின் திரை இணையதளம் மூலமாக எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு Screen Sharing செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், வேலூர் காவல்நிலையத்தில் தனிப்பிரிவில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் சம்பவ சமயத்தில் வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்தேன். கடந்த 17.12.2020 வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் CCTNS ல் ஆப்ரேட்டராக பணி செய்தபோது உதவி ஆய்வாளர்

திரு.அருள்செல்வன் என்பவர் கொடுத்த புகாரை ரமேஷ் என்ற புகார்தாரரிடமிருந்து வாங்கி என்னிடம் கொடுத்தார். மேற்படி புகாரை ஆய்வாளர் பெற்று ஆய்வாளர் சொல்ல சொல்ல நான் கணிணியில் குற்ற எண். 778/2020 என்ற முதல் தகவல் அறிக்கையை கணிணியில் பதிவு செய்தேன். 18.12.2020 அன்று ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு சென்றபோது, அவருடன் சென்று, ஆய்வாளர் மடிக்கணிணியில் அவர் சொல்ல சொல்ல தட்டச்சு செய்தேன். ஆய்வாளர் சாட்சிகளை விசாரித்தபோது, ஆய்வாளர் சொல்ல சொல்ல கணிணியில் தட்டச்சு செய்தேன். செல்லாண்டி அம்மன் கோவில் அருகே 19.12.2020 அன்று ஆய்வாளர் கைது செய்தார். கைது செய்த ஐந்து எதிரிகளையும் விசாரித்தபோது, அவர்கள் ஒப்புதல் வாக்குமூலங்களை கொடுத்தார்கள் அதனை நான் மடிக்கணினியில் தட்டச்சு செய்து பிரிண்ட் எடுத்தேன். 21.12.2020 அன்று எதிரி கிரி என்ற கிரிதரணை தோட்டக்குறிச்சியில் காவல் ஆய்வாளர் கைது செய்தார். அவரை விசாரித்தபோது, அவர் ஆய்வாளரிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் கணினியில் தட்டச்சு செய்து பிரிண்ட் எடுத்தேன். 22.12.2020 அன்று மணிகண்டன் மற்றும் சீனிவாசன் ஆகிய இரண்டு எதிரிகளின் வேலாயுதம்பாளையம் பஸ்ஸ்டாப்பில் வைத்து கைது செய்தார். மேற்சொன்ன இரண்டு எதிரிகளும் ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள். நான் அதனை மடிக்கணிணியில் தட்டச்சு செய்து கணினியின் பிரிண்ட் அவுட் எடுத்தேன். 18.02.2021 அன்று சூர்யா என்ற உதயநிதியை திருச்சி மத்திய சிறையிலிருந்து காவல்நிலைய காவலுக்கு உட்படுத்தி எதிரி சூர்யா என்ற உதயநிதி ஆய்வாளரிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை கணிணியில் தட்டச்சு செய்தேன். நான் கணிணியில் பதிவு செய்ததை பிரிண்ட் எடுத்து

ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். 17.12.2020 ஆம் தேதியன்று ரஞ்சித்குமார் பிரேதத்தை பைபாசில் உள்ள 91 காபி சாப்பில் முன்பிருந்த ரஞ்சித்குமார் பிரேதத்தை எடுத்துசென்று அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு தனியார் ஆம்புலன்சில் எடுத்துச்சென்றோன். இது சம்மந்தமாக 11.05.2021 அன்று மாவட்ட காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>7 மற்றும் 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காலை ரோல்கால் முடிந்து அன்றைய தினத்திற்கான பணி குறித்து பணிப்பதிவேட்டில் எழுதப்பட வேண்டும் என்று சொன்னால் தினமும் ரோல்கால் நடக்கும் அதில் எனக்கு CCTNS ல் தான் வேலை கொடுப்பார்கள். எனக்கு கம்ப்யூட்டரில் பேசிக் கற்றுக்கொண்டுள்ளேன். சிறப்பாக பயிற்சி கொடுக்கவில்லை. காவல்நிலையத்திலிருந்து சம்பவ இடம் 1 கிலோமீட்டர் தொலைவு இருக்கும் என்று சொன்னால் சரிதான் கிழக்கு பக்கத்தில் உள்ளது. நீங்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாகவே சம்பவ இடத்திற்கு சென்றீர்கள் என்று சொன்னால் 17.12.2020 ஆம் தேதியன்று மாலை 5.00 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்றேன். எதன் அடிப்படையில் நீங்கள் சம்பவ இடத்திற்கு சென்றீர்கள் என்றால் காவல்நிலையத்திற்கு அருகில் சம்பவம் நடைபெற்றதால் எனக்கு போன் மூலம் தகவல் கிடைத்தது நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். காவல்நிலையத்தில் சம்பவ சமயத்தின் போது சிறப்பு உதவி ஆய்வாளர், ஆய்வாளர் ஆகியோர் காவல்நிலையத்தில் இருந்தார்களா என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. சம்பவ இடத்திலிருந்து அரசு மருத்துவமனை 16 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்று சொன்னால் சரிதான். ஆம்புலன்சில் சென்றால் அரசு மருத்துவமனைக்கு அரைமணி நேரத்தில் சென்றுவிடலாம். நீங்கள் காவல்நிலையத்தில் உண்மையான தகவல்

முதல்முதலில் கிடைக்கப்பெற்று அதனை மறைத்துவிட்டு பின்னிட்டு இந்த வழக்கில் சாட்சி வேண்டும் என்பதற்காக CCTNS அலுவலக பணியிலிருந்து முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளீர்கள் என்பது பொய் என்று சொன்னால் சரியல்ல CCTNS ல் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். 19.12.2020 செல்லாண்டி அம்மன் கோவிலில் வைத்து கைது செய்து ஒப்புதல் வாக்குமூலத்தை நீங்கள் தட்டச்சு செய்துள்ளீர் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. 20.12.2020 மணிகண்டன், சீனிவாசன் ஆகியோலை சேலம் பைபாஸ் அருகில் கைது செய்து அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை நீங்கள் தட்டச்சு செய்துள்ளீர் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. 28.12.2020 சூர்யா கைது செய்யும் போது அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை நீங்கள் தட்டச்சு செய்துள்ளீர் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தட்டச்சு செய்த எந்த ஆவணத்திலாவது தட்டச்சு செய்தது நீங்கள் தான் என்பதற்கான குறிப்பில்லை என்று சொன்னால் எனக்கு CCTNS ல் பணி செய்வது தான் வேலை. CCTNS பணி செய்வதால் நீங்கள் வெளிப்பணிக்கு செல்லமாட்டீர்கள் என்று சொன்னால் ஆய்வாளர் தேவைப்பட்டால் என்னை வெளியிலும் அழைத்துச்செல்வார். நீங்கள் உங்கள் மேலதிகாரி சொல்லிக்கொடுத்ததன் பேரில் சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.08 17:52:50 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.